**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 01/2022**
**Prosecution Witness:5**

| | | | |
|---|---|---|---|
| Name | **திரு.வரதராஜன்** (PW 5) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **19th day of May 2026** by V.Nivedha Assistant, DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***(A2, A3 are present.)***

**முதல் விசாரணை:–**

நான் தமிழ்நாடு காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று தற்சமயம் ஈரோட்டில் குடியிருந்து வருகிறேன். கடந்த 09.09.2020ம் தேதி நான் மலையம்பாளையம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது, 16.30 மணிக்கு கணபதிபாளையம், இந்திராகாந்திபுரத்தை சேர்ந்த மாரிமுத்து மகன் ஆறுமுகம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரை பெற்று மேற்படி புகாரின் பேரில் மலையம்பாளையம் காவல்நிலைய குற்ற எண்.369/2020 ச/பி.341, 294(b), 323, 506(i) & 379 இதசவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **எழுத்துமூலமான புகார் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு புகாரையும் முதல் தகவல் அறிக்கையின் அசலையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் மற்றைய நகல்களை சம்மந்தபட்ட உயர்அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன்.

2. வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நான் 09.09.2020ம் தேதி 17.30 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான குமாரசாமிபுரம் வாதி ஆறுமுகம் தோட்டம் சென்று சாட்சிகள் பெரியசாமி மற்றும் முருகேசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.05.19 11:20:15 +0530

வரைபடம் தயார் செய்தேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ. 4 ஆகவும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் ஆறுமுகம், பெரியசாமி, அருள்செல்வம், கௌரிசங்கர், பெரியசாமி, முருகேசன் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 20.09.2020ம் தேதி இவ்வழக்கில் காயம்பட்ட வாதி ஆறுமுகத்திற்கு சிகிச்சை அளித்த கொடுமுடி அரசு மருத்துவமனை உதவி மருத்துவ அலுவலர் மருத்துவர் லட்சுமிநாத் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்று பெற்றேன். **காயச்சான்று அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3. இவ்வழக்கின் எதிரிகள் பொன்னுசாமி, கஸ்தூரி மற்றும் தனவேல் ஆகியோர்கள் மாண்புமிகு ஈரோடு மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று 07.11.2020ம் தேதி சமூகம் நீதிமன்றத்தில் சரண் அடைந்து பிணையில் சென்றுவிட்டதால் நான் அவர்களை கைது செய்யவில்லை. 03.07.2021ம் தேதி இவ்வழக்கின் எதிரி பொன்னுசாமி என்பவருக்கு வழங்கப்பட்ட அறிவிப்பின் படி 04.07.2021ம் தேதி காலை 10.00 மணிக்கு நிலையம் ஆஜராகி மேற்படி எதிரி பொன்னுசாமி ஆஜர் செய்த MI கம்பெனி செல்போன் ஒன்றை படிவம் 91 தயார் செய்து கைப்பற்றி எதிரி பொன்னுசாமியிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தான MI கம்பெனி செல்போன் ஒன்றை படிவம் 91 மூலம் சமூகம் நீதிமன்றத்தில் ஒப்புவித்தேன். **படிவம் 91 அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த MI கம்பெனி செல்போன் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 03.09.2021ம் தேதி இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் பொன்னுசாமி, கஸ்தூரி, தனவேல் ஆகியோர்கள் மீது ச/பி. 341, 294(b), 323, 506(i) & 379 இதசவின் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் பெரியசாமி, அருள்செல்வம், கௌரிசங்கர் ஆகியோர்கள் வாக்குமூலத்தில் உள்ளது போல் சொல்லியுள்ளார்கள்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :–**

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.05.19 11:20:19 +0530

புகார்தாரர் ஆறுமுகம் நேரடியாக ஆஜராகி தான் இந்த புகாரை கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி புகாரில் டிராக்டர் ஓட்டுவதை தடுத்து நிறுத்தி மூன்று பேரும் தயோலி நீ யாருடா எங்கள் தோட்டத்தில் வந்து உழவு ஓட்டுவது என்று கெட்ட வார்த்தையால் திட்டினார்கள் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். தனவேல் என்னை கையால் கன்னத்தில் அடித்து இடது நெஞ்சில் குத்திவிட்டு என் கையில் இருந்த REDMI செல்போனை பிடிங்கிகொண்டார் என்று புகாரில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அரசு தரப்பு சாட்சி மருத்துவர் லட்சுமிநாத் என்பவர் என்னை அடையாளம் தெரிந்த மூன்று நபர்கள் குமாரசாமிபுரத்தில் கையாலும், தடிக்குச்சியாலும் அடித்ததாகவும், அதனால் உடம்பில் வலி இருப்பதாகவும் சிகிச்சை அளிக்க கேட்டுக்கொண்டதாக கூறினார் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

2. புகார்தாரர் ஆறுமுகம் உழவு ஓட்டிக்கொண்டிருந்த நிலத்தை கந்தசாமி என்பவரிடம் கிரயம்பெற்றார் என்றால் சரிதான். மேற்படி கந்தசாமி என்பவர் எதிரி பொன்னுசாமி என்பவரின் தம்பி என்றால் சரிதான். இந்த இடம் சம்பந்தமாக கந்தசாமிக்கும் பொன்னுசாமி என்பவருக்கும் இடையே சிவில் வழக்கு நிலுவையில் இருந்துவந்தது என்றால் சரிதான். ஆறுமுகத்துக்கு கொடுக்கப்பட்ட இடத்தை கந்தசாமி முதலில் பொன்னுசாமி என்பவருக்கு தான் கிரயம் செய்து கொடுப்பதாக ஒப்பந்தம் செய்து வைத்திருந்தார்கள் என்றால் அது பற்றி தெரியாது. மேற்படி இடத்தை பொன்னுச்சாமிக்கு தெரியாமல் ஆறுமுகத்துகக்கு விற்றதால் இருவருக்கும் இடையே பிரச்சனை இருந்து வந்தது என்றால் அதுபற்றி தெரியாது. அரசு தரப்பு சாட்சி பெரியசாமி, அருள் என்கிற அருள்செல்வம், முருகேசன், மற்றும் கௌரிசங்கர் ஆகியோர்கள் புகாரில் சொல்லியுள்ளவாறு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், அவ்வாறு சம்பவம் நடைபெறவில்லை என்றும் தனது சாட்சியத்தில் சொல்லியுள்ளார்கள் என்றால் அது தவறு.

3. புகார்தாரர் ஆறுமுகம் புகாரில் என் கையில் இருந்த REDMI செல்போனை தனவேல் பிடிங்கிகொண்டான் என்று சொல்லியுள்ள நிலையில் படிவம் 91ல் 03.07.2021ம் தேதியில் பொன்னுசாமி என்பவருக்கு அறிவிப்பு கொடுத்து 04.07.2021ம் தேதியில் பொன்னுசாமி என்பவரிடம் இருந்து MI கம்பெனி செல்போனை

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.05.19 11:20:24 +0530

பறிமுதல்செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, செல்போன் REDMI தான் ஆனால் கம்பெனி MI என்று போட்டிருக்கும். மேற்படி விவரத்தை இறுதி அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் புகார்தாரர் கொடுத்த பொய் புகாரின் அடிப்படையில் எதிரிகள் மீது தவறாக இறுதிஅறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.05.19 11:20:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.